**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.4654/ஆ5/2023, நாள்.29.11.2023**

.....

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம், அரசு / அரசுநிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் பிரதி மாதம் நுகர்வோர் பாதுகாப்பு கூட்டம் நடத்துதல் – தொடர்பாக |
| பார்வை | வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கூட்டம் நாள். 14.11.2023 |

•••••

பார்வையின் படி நடத்தப்பட்ட நுகர்வோர் பாதுகாப்பு கூட்டத்தில், வேலூர் மாவட்டம், அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு நுகர்வோர் பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்த பிரதி மாதம் நுகர்வோர் பாதுகாப்பு கூட்டம் பள்ளிகளில் நடத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அருகிலுள்ள நுகர்வோர் தன்னார்வளர்களை அழைத்து பள்ளிகளில் பிரதி மாதம் மாணவர்களுக்கு நுகர்வோர் பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்த பள்ளி அளவில் நுகர்வோர் பாதுகாப்பு கூட்டம் நடத்தி அதன் விவரங்களை கோப்பாக பராமரிக்கப்படவேண்டும். ஆய்வு அலுவலர்கள் பள்ளிக்கு வருகை புரியும்போது இக்கோப்பினை அலுவலரின் பார்வைக்கு உட்படுத்தப்படவேண்டும் என அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்கள்,
அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.